# திருவிவிலியமும் மண வாழ்க்கையும்

*முனைவர் க. ஜோஸ்லின் மார்க்ரெட்*
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை
தூய யோவான் கல்லூரி, பாளையங்கோட்டை

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS2i1-July. 6397

## முன்னுரை

கடவுளால் மனிதருக்கு அருளப்பட்ட ஈவே வாழ்க்கை. கால வரம்புக்கும், இன்ப துன்பங்களுக்கும் உட்பட்ட இந்த ஈவை மனிதர் பயன்படுத்தும் விதத்தைப் பொறுத்தே வாழ்க்கை பயனுள்ளதா அல்லது பயனற்றதா என்பதை அவர்கள் உணர முடியும். பிறக்கும் போது யாரும் எதையும் கொண்டு வந்ததில்லை. இறக்கும்போது எதையும் கொண்டு செல்லவும் முடியாது. வாழ்க்கையின் நோக்கம் நேசிக்கப்படுவதற்கல்ல பிறரை நேசிப்பதற்கே" பெற்றுக் கொள்வதற்கல்ல கொடுப்பதற்கே சேவை செய்யப்பட அல்ல சேவை செய்வதற்கே. நாமும் வாழ வேண்டும். பிறரையும் வாழவிட வேண்டும் என்று எண்ணி சமய நூல்கள் அறிவுறுத்தும் வாழ்வியல் விழுமியங்களை மனிதர் தமதாக்கிக் கொண்டு, நேரான, நேர்மையான வழியில் சென்றால் மனத்திலும், குடும்பத்திலும், சமூகத்திலும், நாட்டிலும் அமைதி குடிகொள்ளும். மண்ணுலகம் மகிழும். விண்ணவரும் மகிழுவர். திருவிவிலியத்தில் காணப்படும் வாழ்வியல் விழுமியங்களில் மண வாழ்க்கை பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்

## குடும்ப வாழ்க்கை

திருவிவிலியத்தில் குடும்ப வாழ்க்கைக்குச் சிறப்பான இடம் உண்டு. விண்ணுலகும் மண்ணுலகும் அவற்றில் உள்ள அமைப்புகள் மற்றும் உயிரினங்கள் உருவாக்கப்பட்ட பின்பு படைப்பின் மகுடமாக கடவுள் தம் உருவில் மானிடரை ஆணும் பெண்ணுமாகப் படைத்தார். அவர்கள் பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்ப வேண்டுமென்றும், மண்ணுலகைத் தங்கள் ஆற்றலுக்கு உட்படுத்தி அனைத்து உயிரினங்களையும் ஆளுகை செய்யக் கட்டளையிட்டு, அனைத்துப் பயிரினங்களையும் உணவாகக் கொடுத்த கடவுள் ‘அவர்கள் ஈருடலாயிருப்பினும் ஓர் உடலாகவும் ஒரு மனத்திராயும் இருப்பர்" என்றார். திருவிவிலியம் விவரிக்கும் முதல் திருமணம் இதுவே (தொ.நூல். 1:27-29: 2: 18-24).

## திருமணம்

குடும்பமே சமூக வாழ்க்கையின் அடிப்படை அலகாக இருப்பதனால் திருமணம் வாழ்க்கையின் முக்கிய நிகழ்வாகவும் உயர்வாகவும் மதிக்கப்பட வேண்டுமென்று திருவிவிலியம் கூறுகிறது (எபி. 13:4).

திருமணத்தின்நோக்கம், திருமணநிகழ்வு, யார் யாரைத் திருமணம் செய்யலாம், யாரைத் திருமணம் செய்யக் கூடாது, மணமகன், மணமகள், விருந்தினர் ஆகியோரின் சிறப்பு ஆடைகள், கணவன் - மனைவி ஆகியோரது கடமைகள், மணமுறிவு ஆகிய அம்சங்களும் திருவிவிலியத்தில் இடம் பெற்றுள்ளன.

## திருமணத்தின் நோக்கம்

கடவுளுடைய தூய திருப்பெயருக்கு மகிமை உண்டாகப் பிள்ளைகளைப் பெற்று அவர்களை அவருக்கேற்ற பக்தியில் வளர்க்கவும், ஊன் இயல்புகளுக்கு அடிமைப்படாமல் தங்களைக் காத்துக் கொண்டு கிறிஸ்துவின் உடம்பில் தூய அங்கங்களாக விளங்கவும், இன்ப வேளையிலும், துன்ப வேளையிலும் ஒருவரால் மற்றவர் பெற வேண்டிய நட்பையும் உதவியையும் ஆறுதலையும் மணமக்கள் பெற்றுக் கொள்ளவும் திருமணம் நியமிக்கப்பட்டிருக்கிறது (Book of Common Prayer, SPCK, Delhi, 1993 pp 164-166).

## திருமண நாள்

திருமண நாள் மணவாழ்க்கையில் பொன்னாள். மகிழ்ச்சி பொங்கும் நாள். மணமகள் தங்கமிழைத்த பல வண்ணப்பட்டு உடுத்திருப்பாள். நகைகளால் அழகுப்படுத்தப் படுகிறாள். மணமகன் மலர்மாலை அணிவிக்கப்படுகிறான்.

திருமண விருந்து மணமகன் வீட்டில் நடைபெறுகிறது. விருந்தினருக்கு சீருடை போன்றுதிருமண ஆடை வழங்கப்படுகிறது. திருமண ஆடை அணிந்தவர்கள் மட்டுமே திருமண மண்டபத்திற்குள் செல்ல அனுமதி உண்டு (மத். 22:11-12). மணமக்களுக்குப் பரிசு கொடுக்கும் வழக்கமும் அந்நாட்களில் இருந்தது. மணப்பெண் தன் இனத்தாரையும் பிறந்தகத்தையும் மறுந்துவிட்டு புகவிருக்கும் அகத்திற்கே முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்படுகிறாள் (தி.பா.45:12). உறவினரும், தோழியரும் மணமகளுக்கு ஆசி வழங்கி 'ஆயிரம் ஆயிரமாக நீ பெருகுவாய்" என்று வாழ்த்துகின்றனர் (தொ.நூல் 24:60)

## இயேசுவும் கானாவூர் திருமணமும்

கலிலேயாவில் உள்ள கானா என்ற ஊரில் நடந்த திருமணத்தில் இயேசு கலந்து கொண்டு அந்நிகழ்வைச் சிறப்பித்தார். திருமணத்திற்கு இயேசு கொடுத்துள்ள முக்கியத்துவத்தை இதனால் அறிந்து கொள்ளலாம். விருந்தின் போது திராட்சைரசம் குறைவுபட்டது. இதை அறிந்த இயேசு கற்சாடிகளில் தண்ணீரை ஊற்றி நிரப்பும்படி கட்டளையிட்டார். அதைக் கொண்டு விருந்தினருக்குப் பரிமாறும்படி என பணியாளர்களைக் கேட்டுக் கொண்டார். தண்ணீர் திராட்சைரசமாக மாற்றப்பட்டது. இத்திராட்சைரசம் முந்தைய திராட்சைரசத்தை விட சுவை மிக்கதாய் இருந்ததைக் கண்டு அனைவரும் வியப்புற்றனர். இயேசு செய்த முதலாம் அருஞ்செயல் இதுவே (யோ.2: 1-11).

## திருமணத்திற்குப் பின்

இக்காலத்தில் திருமணமானதும் கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்ளவும் இரு மனமும் ஒரு மனமாகிட அவர்களுக்கு ஒரு மாதம் அளிக்கப்படுகிறது. இந்த இனிய மாதத்தை (honey moon) இருவரும் சுற்றுலாத் தலங்களில் செலவிடுகின்றனர். அக்காலத்தில் மணமகனுக்கு ஓராண்டு விடுமுறை அளிக்கப்பட்டது. விருந்துக்கு அழைக்கப்பட்டாலும் புதிதாகத் திருமணம் செய்தவன் அந்த அழைப்பை ஏற்பதில்லை (லூக். 14:20). அவன் பாதுகாப்புத் துறையில் பணியாற்றினாலும் அவனுக்கு இச்சலுகை அளித்ததன் மூலம் குடும்ப வாழ்க்கைக்கு எவ்வளவு சிறப்பிடம் வழங்கப்பட்டது என்பது புலனாகிறது (இ.ச.24:5).

**மணவாழ்க்கை**

*மனைவி கணவனுக்குரிய எழில்மிகு புள்ளிமான். அவளது அன்பு கணவனை எந்நாளும் ஆட்கொள்ளும். எனவே, கணவன் பிறர்முகம் பார்த்து மயங்காமல் தான் மணந்த பெண்ணோடு மட்டுமே மகிழ்ந்திருக்க வேண்டும் (நீதி..5.18-20). மனைவி உயிரோடு இருக்கும்போது வேறு எந்தப் பெண்ணையும் திருமணம் செய்யக்கூடாது என்று ஆணையிடுகிறது திருவிவிலியம் (லேவி.18:18).*

*மணமான பெண் அவளுடைய கணவன் உயிரோடு இருக்கும் வரை திருமணச் சட்டத்திற்கு உட்பட்டவராததால் வேறு எந்த ஆணுடனும் உறவு கொள்ளலாகாது என எச்சரிக்கப்படுகிறாள். ஆனால், கணவன் இறந்த பின் மனைவி திருமணச் சட்டத்திற்கு உட்பட்டவள் அல்ல. அவள் விரும்பினால் வேறொருவரை மணம் செய்து கொள்ளலாம் (உரோ. 7:1-3).*

*திருவிவிலியத்தின்படி கிறிஸ்து திருச்சபைக்குத் தலையாய் இருப்பது போலக் கணவன் மனைவிக்குத் தலையாய் இருக்கிறான். திருச்சபை கிறிஸ்துவுக்குப் பணிந்து நடப்பது போல அனைத்துச் செயல்களிலும் மனைவி தன் கணவனுக்குப் பணிந்திருக்க வேண்டும். அஞ்சி வாழ வேண்டும். தன் மீது அன்பு கொள்ளுவது போல கணவனும் தன் மனைவி மீது அன்பு கொள்ள வேண்டும். தன் சொந்த உடலை எவ்வாறு பேணி வளர்க்கிறானோ அவ்வாறே தன் மனைவியையும் பேணி வளர்க்க வேண்டும் (எபே.5: 21-33).*

**மனைவியின் பண்பு நலன்கள்**

*விவேகமுள்ள மனைவி ஆண்டவர் அளிக்கும் கொடை. பண்புள்ள மனைவி தன் கணவனுக்கு மணிமுடி. ஞானமுள்ள பெண் தன் இல்லத்தைக் கட்டியெழுப்புகின்றாள். திறமை வாய்ந்த மனைவி பவளத்தை விட பெருமதிப்புள்ளவள் அவள் வைகறையில் துயிலெழுவாள். வீட்டாருக்கு உணவு சமைப்பாள். தன் வேலைகளை விருப்புடனும் சுறுசுறுப்புடனும் செய்வாள். தன் உழைப்பு நற்பலன் தருமென்று எண்ணி ஊக்கம் குன்றாது உழைப்பாள். தனக்கு தேவையானவற்றையும் தன் வீட்டிலுள்ளவர்களுக்குத் தேவையானவற்றையும் அவளே செய்வாள். எளியவருக்கு உதவி செய்வாள். வயிறார உணவளிப்பாள். அவள் ஆற்றல் உடையவள். எதிர்காலத்தைப் பற்றிய கவலையற்றவள். ஞானத்தோடு பேசுவாள். அன்போடு அறிவுரை கூறுவாள். அவளுடைய பிள்ளைகள் அவளைப் புகழ்கின்றனர். திறமை வாய்ந்த பெண்களுள் சிறந்தவள் அவளே என்று அவளுடைய கணவன் புகழுவான் என்று மனையாளின் சிறப்புப் பண்புகளைத் திருவிவிலியம் சித்தரிக்கிறது (நீ.மொ. 31).*

**திருவிவிலியமும் பெற்றோர் ஏற்பாடு செய்த திருமணங்களும்**

*ஆபிரகாமுக்கும் எகிப்தியப் பணிப் பெண் ஆகாருக்கும் பிறநதவன் இஸ்மவேல். மனைவி சாராவின் விருப்பத்திற்கு இணங்கி ஆகாரையும் இஸ்மவேலையும் மிகுந்த வேதனையுடன் வெளியேற்றினான் ஆபிரகாம். இருவரும் பாரான் என்ற பாலைநிலத்தில் வாழ்ந்து வந்தனர். வயது வந்ததும் இஸ்மவேலுக்கு ஓர் எகிப்தியப் பெண்ணை மணமுடித்து வைத்தாள் ஆகார். திருவிவிலியத்தின்படி பெற்றோரால் ஒழுங்கு செய்யப்பட்ட முதல் திருமணம் இதுவே (தொ.நூல். 21:9-21). அக்காலத்தில் குடும்பச் சட்டங்களுக்குட்பட்டே திருமணங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன.*

*பெற்றோரால் திருமணம் ஏற்பாடு செய்யப்பட்டாலும் ஈசாக்குக்கும் ரெபேக்காவுக்கும் இடையே நடைபெற்ற திருமணம் "கடவுளின் செயல்" என்று ரெபேக்காவின் தந்தை பெத்துவேல் கூறுகிறார். மேலும் பெண்ணின் விருப்பத்தை அறிந்த பின்பே திருமணம் உறுதி செய்யப்பட்டுள்ளது (தொ.நூல்.*

*24:50-58).* எனினும், அவர்களுடைய மகன் ஏசா தனது விருப்பத்தின்படி இத்தியன் குலத்தைச் சேர்ந்த பெலேரின் மகள் யுதித்தையும் ஏலோவின் மகள் பாஸ்மத்தையும் மணந்து கொண்ட போது அவன் பெற்றோர் ஈசாக்கும் ரெபேக்காவும் மனக்கசப்பு அடைந்தனர் (தொ.நூல். *26:34-35).*

பெண்கள் தாங்கள் விரும்பியவரை மணம் முடிக்கலாம் என்ற உரிமை வழங்கப்பட்டிருந்தாலும் அவ்வுரிமை நிபந்தனைக்குட்பட்டது. "இஸ்ரயேல் மக்களில் எந்த ஒரு குலத்திலும் உரிமைச் சொத்தில் உடைமை கொண்ட பெண் தன் தந்தையின் குலத்தில் உள்ள ஒருவனையே மணமகனாகக் கொள்ள வேண்டும்" என்பதே அந்த நிபந்தனை (எண்.*36:6-8).*

**திருவிவிலியம் விதித்துள்ள தடை**

மனைவி உயிருடனிருக்க வேறு எந்தப் பெண்ணையும் (லேவி.*18:18)* இதனக்கு இரத்த உறவாயிருக்கும் எந்தப் பெண்ணையும் (லேவி.*8:6)* இவேறு தெய்வங்ளை வழிபடுவோர் வீட்டில் உள்ள பெண்ணையும், கற்பு நெறி தவறியதால் விலக்கப்பட்ட பெண்ணையும் மணம் செய்யக் கூடாது என்று திருவிவிலியம் கட்டளையிடுகிறது.

**மணவாழ்க்கை பற்றித் திருதூதர்களின் கருத்து**

இயேசுவின் கட்டளைகளுக்குக் கீழ்ப் படிந்து அவரது சீடர்கள் உலகின் பல பகுதிகளுக்குச் சென்று நற்செய்தியை அறிவித்து சபைகளை நிறுவினர். புதிய சபை மக்களிடையே அவ்வப்போது பல வாழ்வியல் பிரச்சினைகள் எழும்பின. அவைகளில் திருமணமும் ஒன்று. அவற்றைத் தீர்த்து வைக்க திருத்தூதர்கள் பல ஆலோசனைகளைத் தங்கள் திருமுகங்கள் மூலம் தெரிவித்தனர்.

கற்பு நெறிகேடு அதிகமாக இருப்பதால் கணவனும் மனைவியும் இணைந்து வாழ வேண்டும். கணவனுக்குத் தன் உடல் மீது அதிகாரம் இல்லை. மனைவிக்கே அந்த அதிகாரம் உண்டு. மணவாழ்க்கைக்குரிய உரிமையை ஒருவருக்கொருவர் மறுக்கக் கூடாது. மணமகாதாவர்கள் திருமணம் செய்யாமல் இருப்பது மிகவும் நல்லது. எனினும், தங்கள் புலன்களை அடக்க இயலாதவர்கள் காமக்கோட்டிகளாக அலைவதை விட திருமணம் செய்து கொள்ளுவதே நல்லது என்கிறார் பவுல் (1கொரி. *7:1-9)*

மணவாழ்க்கை மகிழ்வுடனிருக்கவும் சுமூகமாக இருக்கவும் மனைவியர் கணவருக்குப் பணிந்திருக்க வேண்டும் என்றும், அஞ்சி நடக்கவேண்டும் என்றும், கணவர் ஒவ்வொருவரும் தம்மீது அன்பு கொள்ளுவது போல மனைவியரைத் தம் சொந்த உடல் எனக் கருதி அவர்கள் மீது அன்பு செலுத்த வேண்டும் என்றும், எக்காரணத்தினாலும் அவர்களைக் கொடுமைப்படுத்தாதீர் என்றும் பவுல் அறிவுறுத்துகிறார் (எபே.*5:21-33* கொலோ. *3:18,19).* அதுபோல, திருமணமான பெண்கள் கணவருக்குப் பணிந்து நடக்க வேண்டும். வெளி அலங்காரத்தில் கவனம் செலுத்தாமல் பணிவும் அமைதியுமே அழியாத அலங்காரம் என்று கருதி, கணவர்களுடன் இணைந்த வாழ்வு நடத்த வேண்டும் என்றும், கணவர்களும் தங்கள் மனைவியர் வாழ்வு தரும் அருளுக்கு உடன் உரிமையாளராக இருப்பதால் அவர்களுக்கு மதிப்பு கொடுக்க வேண்டும் என்றும் பேதுரு ஆலோசனை கூறுகிறார் (1பேது. *3:1-8).*

**மணமுறிவு**

பழங்காலத்தில் ஆண்களின் சொத்தாகவே கருதப்பட்ட பெண்கள் குழந்தைகளைப் பெற்றெடுக்கும் இயந்திரங்களாகவே நடத்தப்பட்டனர். சமூக வாழ்க்கையில் முக்கிய பங்கு எதுவும் வழங்கப்படவில்லை. ஆனால், திருவிவிலியத்தில் பெண்ணுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு குடும்பத்தின் ஆக்கமும் அழிவும் பெண்ணின் கையில் இருப்பதால் நற்குணமுள்ள பெண்ணைத் தேர்ந்து எடுப்பதில் ஆண்கள்

அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்று திருவிவிலியம் வலியுறுத்துகிறது. (நீதி.14:1 31:10-31). அவளது வெளித்தோற்றமல்ல: மாறாக, அவளது உள்ளமே நல்ல குழந்தைகளை உருவாக்க உதவும்.

அக்காலக் குடும்பவாழ்க்கையில் ஒருவனுக்கு ஒருத்தி என்ற கொள்கைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. ஆபிரகாம், தாவீது, சாலமோன் ஆகியோருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட வாழ்க்கைத் துணைவியர் இருந்ததாகத் திருவிவிலியத்தில் கூறப்பட்டுள்ளது (தொ.நூல், 16:15 2சாமு.3:2-51அர.11:1). இருப்பினும், மனைவியை விலக்குதல் சமுதாய வாழ்க்கைக்கு ஒரு தலைவலியாகவே இருந்து வந்திருக்கிறது.

ஓர் ஆண் மகனையும் ஒரு பெண் மகளையும் திருமணத்தின் வாயிலாக ஒன்றாக இணைப்பது கடவுளே. தன்னுடைய விருப்பத்திற்கேற்ப மக்கள் வாழ வேண்டு மென்பதே அவரது எண்ணம். மனைவிக்கு ஒருபோதும் நம்பிக்கைத் துரோகம் செய்யக்கூடாது என்கிறார் மணமுறிவை வெறுக்கும் கடவுள் (மலா.2:14-16).

### மோசேயும் மணமுறிவும்

மோசே காலத்தில் மணவிலக்கு அனுமதிக்கப்பட்டிருந்தது. திருமணத்திற்குப் பின் மனைவியின் செயல் அருவருக்கத்தக்கதாக இருந்து அவள் மேல் கணவனுக்கு விருப்பமில்லையெனில், கணவன் முறிவுச் சீட்டு எழுதி அவள் கையில் கொடுத்து அவளைத் தன் வீட்டிலிருந்து அனுப்பி விடலாம் என்கிறது திருவிவிலியம் (இ.ச 24:1).

### பழைய ஏற்பாடும் மணமுறிவும்

திருச்சட்டத்தின்படி ஒருவனுடைய மனைவி அருவருக்கத்தக்கச் செயல்களைச் செய்தால் கணவன் மணமுறிவுச்சீட்டு எழுதி அவள் கையில் கொடுத்து அவளை அனுப்பிவிடலாம். அவள் மற்றொருவனை மணந்து அவனும் அவளை விரும்பாமல் மணமுறிவுச்சீட்டு எழுதிக் கொடுத்து அவளை அனுப்பி விட்டால் முதல் கணவன் அவளை மீண்டும் மனைவியாக ஏற்றுக் கொள்ளக்கூடாது(இ.ச.21:1-4). தன் மனைவி கன்னிதன்மையற்றவள் என்று பொய் சொல்லி அவளைத் தள்ளி விடமுடியாது (இ.ச.22:13-19). கன்னிப்பெண் ஒருத்தியை பலவந்தப்படுத்தி உறவு கொண்டது கண்டுபிடிக்கப்பட்டால் அவளை அவன் மனைவியாக ஏற்றுக்கொள்ளுவது மட்டுமின்றி பெண்ணின் தந்தைக்கு ஐம்பது வெள்ளிக்காசு கொடுக்க வேண்டும். மேலும் அவள் வாழ்நாள் முழுவதும் அவளை மணமுறிவு செய்ய முடியாது (இ.ச.22:28-29).

### வேற்றினப் பெண்கள் விலக்கப்படல்

திருச்சட்டத்தின்படி இஸ்ரயேல் மக்கள் மற்ற இனப் பெண்களைத் திருமணம் செய்யக்கூடாது. இஸ்ரயேல் மக்கள் அடிமைகளாக பாபிலோனில் வாழ்ந்த போது இஸ்ரயேல் மக்களில் பலர் வேற்றினப் பெண்களைத் திருமணம் செய்தனர். கி.மு.538இல் பாரசீக மன்னர் பாபிலோனைக் கைப்பற்றிய போது இஸ்ரயேல் மக்கள் விடுதலை பெற்று நாடு திரும்பினர். எஸ்றா என்ற குருவின் ஆலோசனைப்படி வேற்றினப் பெண்களும் அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகளும் விலக்கி வைக்கப்பட்டனர் (எஸ்றா 10: 1-16).

### இயேசுவும் மணமுறிவும்

மோசே காலத்தில் அனுமதிக்கப்பட்ட மணமுறிவுச்சட்டம் ஒரு நிரந்தரச் சட்டம் அன்று. புதிய ஏற்பாட்டின்படி அது ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல. எவரும் தம் மனைவியைக் கற்பு நெறி தவறியமைக்காக அன்றி, வேறு எந்தக் காரணத்திற்காகவும் விலக்கக்கூடாது என்று இயேசு கிறிஸ்து தன் மலைப்பொழிவில் குறிப்பிட்டிருக்கிறார் (மத்.5:31, 32). திருச்சட்டத்தில் கண்டிப்பாக இருக்கும் மறை அறிஞர்கள் இது பற்றி மோசேயின் கட்டளையைச் சுட்டிக்காட்டி

அவரிடம் கேட்டபோது மக்களின் கடின உள்ளத்தினிமித்தமே மோசே அவ்வாறு கட்டளையிட்டார். ஆனால், கடவுள் ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்ததினால் கணவன் தன் தாய் தந்தையை விட்டு தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான். இனி அவர்கள் இருவர் அல்லஇ ஒரே உடல். எனவே கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும் என்று அவர்களுக்குப் பதிலளித்தார் (தொ.நூல். 2:24, மத்.19:4, 5 மாற்கு 10: 2-9).

இயேசுவின் சீடர்களுக்கு இதுபற்றி ஐயம் ஏற்பட்டது. அவர்கள் இயேசுவிடம் கணவன் மனைவி உறவு நிலை இத்தகையது என்றால் திருமணம் செய்து கொள்ளாதிருப்பதே நல்லது என்ற தங்களது எண்ணத்தை வெளியிட்டனர். இது எல்லாருக்கும் சாத்தியமல்ல. அருட்கொடை பெற்றவர்களுக்கு மட்டுமே இது சாத்தியம் என்று இயேசு அவர்களுக்கு மறுமொழியாகக் கூறினார் (மத். 19: 3-12).

தூய வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்று தங்கள் திருமுகங்களில் திருத்தூதர்கள் பல்வேறு சபை மக்களுக்கு அறிவுறுத்துகின்றனர். மனைவி கணவனிடமிருந்து பிரிந்து வாழக்கூடாது. கணவனும் மனைவியை விலக்கிவிடக்கூடாது. பிரிந்து வாழ நேரிட்டால் மனைவி கணவனுடன் ஒப்புரவாக வேண்டும் அல்லது மறுமணம் செய்யாமலிருக்க வேண்டும் என்கிறார் பவுல் (1கொரி.7:10, 11).

மணமுறிவு விரும்பத்தகாத ஒரு செயல். முற்காலத்தில் நம் நாட்டில் மணமுறிவு மிக அரிது. மேற்கு நாடுகளில் மணமுறிவு ஒருசமூகப் பிரச்சினையாக எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. மேற்கு நாடுகளின் கலாச்சாரத் தாக்கத்தாலும் தாராளமாய்ப் பொருளாதாரக் கொள்கைகளாலும் சமீப காலத்தில் இந்தியாவில் மணமுறிவு என்ற செயல் சமூகத் தொற்று நோய் போல் பரவிக் கொண்டிருக்கிறது. இது குடும்ப மற்றும் சமூக அமைதிக்கு அச்சுறுத்தலை உண்டாக்குகின்ற சமூக அணுகுண்டு. இந்த அச்சுறுத்தல் எல்லா சமயத்தினரையும் எல்லா இனத்தினரையும் பாதிக்கிறது. ஆண்களுக்கு இணையாக பெண்களும் ஊதியம் பெறும் தகவல் தொழில் நுட்பத்துறையிலும், அரசுத் துறைகளிலும், கல்வி நிறுவனங்களிலும் பணியாற்றும் இளைஞர்கள் “சுதுரந்தோ” தொடர் வண்டி வேகத்தில் திருமணம் செய்து கொள்கின்றனர். சகிப்பின்மையாலும் இணக்கமின்மையாலும் அதே வேகத்தில் மணவாழ்க்கையை முறித்துக் கொள்கின்றனர். குறுகிய கால மணவாழ்க்கையின் பரிசாகப் பெற்ற பிள்ளைகள் யாருக்குச் சொந்தம் என்பதை நிர்ணயிக்க நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது. அப்பிள்ளைகளின் மனநிலை எப்படியிருக்கும் என்று சிந்தித்தால் வேதனை பெருகுகிறது. இவர்கள் தான் நம் நாட்டின் எதிர்காலத் தூண்கள்! பண ஆசை என்ற புகையால் சூழப்பட்ட இந்த இளைஞர்கள் சமய நூல்களில் கூறப்பட்டுள்ள “பண ஆசையே எல்லாத் தீமைகளுக்குக் காரணம்” என்ற கருத்தையும் திருமணத்தின் தூயத்தன்மை, கணவன்-மனைவி ஆகியோரின் கடமைகள், கற்புநெறி தவறினால் மட்டுமே ஒருவன் தன் மனைவியை விலக்கலாம் ஆகிய திருவிவிலியத்தின் போதனைகளையும் தமதாக்கிக் கொண்டு அவ்வழியில் நடந்தால் மணமுறிவுக்கு முடிவு கட்டிவிடலாம்.

## கற்புநெறி

கணவன் தன்னுடைய மனைவியைத் தவிர மற்றவர்களுடன் உடலுறவு கொள்ளுவது கற்புநெறி தவறுதலாகும். இந்நெறிகெட்டச் செயல் குடும்பத்திலும் சமூகத்திலும் பெரும்பாதிப்பை உண்டாக்குகிறது. குடும்ப அமைதி மறைகிறது. வன்முறைகளுக்கு வித்திடுகிறது. சில நேரங்களில் கொலைக்குக் காரணமாகவும் அமைகிறது. இது ஒரு சமூகத்

தொற்று நோய். “இது நம் குடும்பத்தின் தூய்மையைப் பாழாக்கும் செயல்” என்கிறார் ஃப்ரீட்மன் (Freedman,1992:Vol.I,p.85). இதற்கு எல்லையே கிடையாது. எல்லாச் சாதியினர் மீதும் எல்லா நாட்டினர் மீதும் தனது ஆதிக்கத்தை இது நிலைநாட்டுகிறது.

திருவிவிலியம் ஒரு வாழ்க்கைச் சாத்திரமாதலால் கற்பு நெறிக்கு இதில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. கடவுள் இஸ்ரயேல் மக்களுக்கு அளித்த பத்துக் கட்டளைகளுள் இரு கட்டளைகளில் கற்புநெறி பற்றிக் குறிப்பிட்டதிலிருந்தே அதன் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டுள்ளதை அறியலாம். கற்புநெறி தவறாதே, பிறர் மனைவியையோ அடிமைப் பெண்ணையோ காமுறாதே என்ற கட்டளைகள் கற்புநெறி தவறுதல் அக்காலச் சமூக வாழ்க்கையில் எவ்வளவு எதிர்மறைத் தாக்கத்தை உண்டாக்கியிருந்தது என்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றன (வி.ப.20:14-17 இ.ச.5:18-21). கற்புநெறி தவறுகிறவன் மதிகேடன் என்றும், அவ்வாறு செய்கின்றவன் தன்னையே அழித்துக் கொள்கின்றான் என்றும் (நீதி. 6:32), அவன் கடவுளின் தண்டனைக்குத் தப்பமுடியாது எனவும் திருவிவிலியம் எச்சரிக்கிறது (மலா.3:5).

மானிடர் தூயோராவதே கடவுளின் திருவுளம். தூய வாழ்வே அவரது விருப்பம். எனவே தொடர்ந்து கற்புநெறி தவறும் பரத்தமைக்கு இடங்கொடுக்கக் கூடாது. பரத்தமை அழிவுக்கு நேராக அழைத்துச் செல்வதால் பரத்தமை என்ற சொல்லை உச்சரிக்கக் கூடாது (எபே.5:3). பரத்தமையில் ஈடுபடுவோருடன் உறவு வைத்துக் கொள்ளக் கூடாது (1கொரி.5:9). எங்கும் பரத்தமை காணப்படுவதால் ஆண்கள் தம் சொந்த மனைவியோடு வாழ வேண்டும் என்று எபேசு சபை மக்களுக்கும் (எபே.5:3) இதூய்மை உள்ளவனாகக் காத்துக் கொள்ளும்படி திமொத்தேயுவுக்கும் (1திமொ.5:22) ஆலோசனை கூறும் பவுல், பரத்தமையில் ஈடுபடுவோர் இறையரசில் பங்கு பெறும் உரிமையை இழந்து விடுவர் என்று எச்சரிக்கிறார் (எபே.5:4இ5).

தேவையற்ற முடி அலங்காரம், நகைகள், குறை ஆடைகள் (1பேதுரு 1-6), மடத்தனமான பேச்சு (எபே.5:4), இச்சையுடன் கூடிய பார்வை (மத்.5:28,29) ஆகியவை கற்பு நெறி தவறுதலுக்கு ஊக்கம் அளிக்கும். கண்டித்தலும் தண்டித்தலும் அச்செயலிலிருந்து விலகியிருக்கச் செய்யும் (நீ.மொ.6:23).

## திருவிவிலியமும் கற்புநெறியில் தேறியோரும் தவறியோரும்

திருவிவிலியத்தின்படி கற்புநெறித் தேர்வில் தேறியவர்களில் முதலிடத்தைப் பெறுபவர் யோசேப்பு1. தனது அதிகாரி போத்திப்பாரின் மனைவியின் விருப்பத்திற்கு இணங்க மறுத்தவர். கற்புநெறி தவறுதல் மாபெரும் தீச்செயல் என்றும், அது கடவுளுக்கு எதிரான பாவம் என்று கூறித் தன்னைப் பாதுகாத்துக் கொண்ட நேர்மையாளர். இக்காரணத்தினால் பொய்க்குற்றஞ்சாட்டப்பட்டுச் சிறைத் தண்டனை உட்பட பல இன்னல்களைச் சந்திக்கவும் சகிக்கவும் நேரிட்டது (தொ.நூல்.39). எனினும், கடவுள் அவரைக் கைவிடாமல் எகிப்து நாட்டின் ஆளுநராக உயர்த்தினார்.

யோபு வாழக்கையில் அவர் இப்படிப் பட்ட பிரச்சினைகளைச் சந்தித்த விவரங்கள் திருவிவிலியத்தில் கொடுக்கப்படாவிட்டாலும் கன்னியை நோக்கமாட்டேன் “கற்புநெறி தவறிய நடத்தை ஒரு தீச்செயல். அது நம்மை படுகுழி வரைச் சுட்டெரிக்கும். வருவாய் அனைத்தையும் அடியோடு அழிக்கும் தீசுசு என்ற உறுதியான கருத்து அவரது உத்தமத்தைக் காட்டுகிறது (யோபு 31: 1, 11, 12). கற்புநெறியில் தேறியவர் என்பதற்கு அவனைப்போல் மாசற்றவனும் நேர்மையானவனும் கடவுளுக்கு அஞ்சி தீயதை விலக்கி நடப்பவனும் மண்ணுலகில் ஒருவனும் இல்லை என்ற கடவுளின் நற் சான்றே சான்றாகும் (யோபு 2:3).

கணவனை இழந்த போதிலும் தன் மாமியாரை விட்டுப் பிரியாமல் அவளது துயரங்களில் பங்கு கொண்டு கற்புநெறி தவறாமல் தன் குடும்பத்தைக் காப்பாற்றியவள்

ரூத்து. உறுதியான குடும்பப் பற்றும், இன ஒற்றுமையும் இஸ்ரயேல் மக்களின் சிறப்புப் பண்புகள் (திருவிவிலியம், 2008:ப.407). ஏதாவது ஒரு காரணத்தால் ஒரு குடும்பம் சிதைவுற்றுப் பெயரற்றுப் போகும் நிலைக்கு வருமாயின் அதைக் காப்பாற்றுவது அக்குடும்பத்தின் நெருங்கிய உறவினரது தலையாய கடமை. அதற்கிணங்கப் போவாசு கற்புநெறிதவறாத உறவினரான கைம்பெண் ரூத்தை மணந்து இக்கடமையை நிறைவேற்றினான் (ரூத்து 3:4).

தாவீதின் கற்புநெறி தவறியச் செயல் பத்சேபாவின் கணவன் உரியாவின் மரணத்திற்குக் காரணமாயிற்று (2சாமு.11,12:1-5). எனினும், அக்கொடூரப் பாவத்திற்காக அவன் வருந்தினான். "என் குற்றங்களை நான் உணர்கின்றேன். என் பாவம் எப்போதும் என் மனக்கண் முன் நிற்கின்றது. உமக்கு உதிராக நான் பாவம் செய்தேன். என் பாவக் கறைகளை எல்லாம் துடைத்து தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும்சுசு என்ற அவனது உருக்கமான விண்ணப்பம் கேட்கப்பட்டு அவனுக்கு மன்னிப்பு அருளப்பட்டது (தி.பா. 51:3-10).

இயேசு கிறிஸ்துவினிடம் குற்றம் காண வேண்டும் என்ற நோக்குடன் பாலியல் தொழிலில் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்ட ஒரு பெண்ணை அவர் முன் நிறுத்தி மோசேயின் சட்டப்படி அவள் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும். "நீர் என்ன சொல்கிறீர்?" என்று அவரிடம் வினவினர். "உங்களுள் பாவம் இல்லாதவன் முதலில் இப்பெண் மேல் கல் எறியட்டும்" என்று இயேசு கூறியதும் அவர்கள் அனைவரும் அங்கிருந்து சென்று விட்டனர் "நீ போகலாம். இனிப் பாவம் செய்யாதே" என்று சொல்லி அவளை அனுப்பி விட்டார் (யோ.8:3-11). திருவிவிலியத்தில் காணப்படும் இவ்விரு நிகழ்வுகளும் தவறி விழுந்த மக்களுக்கும் ஒளிமயமான எதிர்காலம் உண்டு என்பதை வலியுறுத்துகின்றன.

ஓரினச் சேர்க்கையை வன்மையாகக் கண்டிப்பதோடு அப்படிப்பட்டவர்கள் அழிக்கப்பட வேண்டும் என்று திருவிவிலியம் கட்டளையிடுகிறது (லேவி.18: 22-29).

மணமான ஒருவன் மணமாகாத ஒருத்தியை பலவந்தமாகப் பிடித்து அவளோடு உடலுறவு கொண்டால் அவனைக் கொல்ல வேண்டும். ஆனால் அவளுக்கு எந்தவிதமான தீங்கும் செய்யக்கூடாது (இ.ச.22:25,26).

## முடிவுரை

திருவிவிலியத்தில் குடும்ப வாழ்க்கைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் திருமணமான பின் கணவனும் மனைவியும் இருவரல்லர் ஒருவரே என்ற கருத்து முக்கிய வாழ்வியல் விழுமியமாக கருதப்பட்டது. இஸ்ரயேல் மக்கள் பல கலாச்சார சூழலில் வாழ்ந்ததால் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் உள்ள திருமண வாழ்வு சிறப்பானதாகக் கருதப்பட வில்லை. புதிய ஏற்பாட்டில் திருமண வாழ்க்கை மீண்டும் முதன்மை இடத்தைப் பெறுகிறது. இயேசு கிறிஸ்துவும் திருத்தூதர்களும் திருமண வாழ்க்கைக்கு மீண்டும் சிறப்பிடத்தைக் கொடுத்தனர். இக்கருத்துக்களை மக்கள் தமதாக்கிக் கொண்டால் திருமணம் சம்பந்தமான அனைத்து பிரச்சி னைகளுக்கும் முடிவு கட்டி விடலாம். விண்ணகத்தில் நாம் எதிர்நோக்கும் மகிழ்வும் அமைதியும் கொண்ட வாழ்க்கைக்கு மண்ணுலகில்நாம் அடித்தளம் இடலாம்.

## ஆய்வுக்கு உதவிய நூல்கள்

1. திருவிவிலியம் (பொது மொழி பெயர்ப்பு), இந்திய வேதாகமச் சங்கம், பெங்களூர், 2008
2. தேடி வந்த மீட்பர், கனகராஜ் பி, கனரா பதிப்பகம், பாளையங்கோட்டை, 2014
3. Book of Common Prayer, SPCK, Delhi, 1993.
4. The Anchor Yale Bible Dictionary (Vol.1), Freedman, 1992
5. The Topical Bible, New Living Translation, 2004.